# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 1st Term Examination - 2021

FWC

| தரம் :- 12 (2022) | வணிகக்கல்வி - I | நேரம் : மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் :....................................

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இலக்கம் | புள்ளிகள் |
| 01 – 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

## பகுதி I

**01.** வணிகம் தொடர்பில் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.

A – மனித தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவுசெய்வதற்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும் வணிகம் எனப்படும்.

B – வியாபாரத்தையும் துணைச் சேவைகளையும் உள்ளடக்கியது வணிகம் எனப்படும்.

C – மனித தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்காக பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல், சந்தைப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் ஆகியவற்றுடன் தொடர்புபடும் செயற்பாடுகள் வணிகம் எனப்படும்.

D – வர்த்தகத்தையும் கைத்தொழில்களையும் உள்ளடக்கியது வணிகமாகும்.

(1) A உம் C உம் மாத்திரம்
(2) A, B மற்றும் C மாத்திரம்
(3) A, C மற்றும் D மாத்திரம்
(4) A, B மற்றும் D மாத்திரம்
(5) A, B, C மற்றும் D (……)

**02.** மனிதன் உயிர்வாழ்வதற்கு அன்றாடம் நிறைவுசெய்யப்பட வேண்டியவை தொடர்பில் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.

(1) வரையறையற்றதாக இருத்தல்.
(2) கட்டாயம் பூர்த்திசெய்யப்பட வேண்டியதில்லை.
(3) சமூகத் தாக்கங்களால் மாற்றடையாது.
(4) வணிகர்களினால் தோற்றுவிக்க முடியும்.
(5) நபருக்கு நபர் வேறுபட்டது. (……)

**03.** இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வகைப்படுத்தலின் பிரகாரம் கைத்தொழில் துறைக்கு உரித்தான பொருளாதார நடவடிக்கை,

(1) மீள்சுழற்சி
(2) சட்டப் பரிந்துரை
(3) காப்புறுதி
(4) மரக்கறி விதைகள் விற்பனை
(5) காடு வளர்ப்பு (……)



kalvi.lk

**04.** பண்டமாற்று முறை தொடக்கம் இன்று வரை பணப் பயன்பாட்டில் ஏற்பட்ட பரம்பல் படிமுறைகளில் சில X நிரலிலும் அவற்றுக்கான உதாரணங்கள் Y நிரலிலும் தரப்படுகின்றன. (Y நிரலில் ஒன்று மேலதிகமாகத் தரப்பட்டுள்ளது.)

| **நிரல் - X** | **நிரல் - Y** |
|---|---|
| A – பொருட் பயன்பாடு | *1* – கடனட்டை, வரவட்டை |
| B – உலோகப் பயன்பாடு | *2* – ரூபா, டொலர், யூரோ |
| C – நாணயம், நாணயத் தாள்களின் பயன்பாடு | *3* – தங்கம், வெள்ளி |
| D – வங்கிப் பணப் பயன்பாடு | *4* – புகையிலை, சிப்பி, யானைத் தந்தம் |
| | *5* – காசோலை |

*(1)* A-4, B-3, C-2, D-5 *(2)* A-3, B-2, C-1, D-5 *(3)* A-4, B-3, C-2, D-1
*(4)* A-4, B-3, C-5, D-1 *(5)* A-4, B-5, C-1, D-2 (……)

**05.** பின்வரும் அட்டணையில் X நிரலில் அக்கறையுடைய தரப்பினர்களும் Y நிரலில் வணிகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப் பொறுப்புக்களும் தரப்பட்டுள்ளன.

| **நிரல் X** | **நிரல் Y** |
|---|---|
| A – உரிமையாளர் | *1* – வேலைவாய்ப்பிற்குப் பங்களிப்புச் செய்தல் |
| B – ஊழியர் | *2* – நியாயமாக நடந்துகொள்ளல் |
| C – வாடிக்கையாளர் | *3* – நியாயமான உழைப்பைப் பெற்றுக்கொள்ளல் |
| D – சமூகம் | *4* – சமத்துவமான நிலை |

அக்கறையுடைய தரப்பினர்களையும் வணிகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப் பொறுப்புக்களையும் சரியாக இணைக்கும்போது பெறப்படும் விடையினைத் தெரிவுசெய்க.

*(1)* A-2, B-3, C-3, D-1 *(2)* A-2, B-4, C-3, D-1 *(3)* A-3, B-1, C-2, D-4
*(4)* A-3, B-4, C-2, D-1 *(5)* A-2, B-1, C-4, D-3 (……)

**06.** பாடசாலை ஒன்றின் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்கள் சில கீழே தரப்படுகின்றது.

A – மாணவர் மனப்பாங்கு கற்றலுக்கு எதிராகக் காணப்படல்
B – தேவையான அளவு வகுப்பறை வசதி காணப்படல்
C – ஆசிரியர்கள் பொறுப்புக்கள் வகை கூறலை ஏற்காமை
D – அயற்பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினை பெறல்
E – ஆசிரியர்கள் கற்பிக்கும் திறனைக் கொண்டிருத்தல்
F – குறைவான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருத்தல்
G – மாணவர்கள் கீழ்படிவுள்ளவர்களாகக் காணப்படல்

மேற்குறித்த விடயங்களில் அகச் சூழலுக்குரிய பலங்களைக் மட்டும் கொண்ட விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) A, C, F (2) B, E, G (3) B, D, E, G
(4) A, C, D, F (5) B, C, D (……)

**07.** பின்வரும் சூழல் காரணிகளுள் அண்மிய சூழல் காரணிகளை மட்டும் கொண்ட விடையாகக் கருதப்படுவது,

*(1)* உரிமையாளர், நிறுவனக் கலாசாரம் *(2)* நிறுவனக் கட்டமைப்பு, வளங்கள்
*(3)* வாடிக்கையாளர், போட்டியாளர்கள் *(4)* பொருளாதாரச் சூழல், மக்கட்சூழல்
*(5)* மக்கட்சூழல், பதிலீட்டுப் பொருள் உற்பத்தியாளர் (……)



kalvi.lk

**08.** வாசன் என்பவர் இரத்தினக்கல் அகழ்வு மற்றும் இரத்தினக் கல் கற்களைப் பட்டை தீட்டி ஆபரணங்களைத் தயாரிக்கும் வணிகமொன்றை நடாத்துகிறார். இங்கு காணப்படும் வணிகங்களுக் கிடையிலான தொடர்பாவது,

(1) கைத்தொழில் உற்பத்தியும் சேவை உற்பத்தியும்
(2) விவசாய உற்பத்தியும் கைத்தொழில் உற்பத்தியும்
(3) முதனிலை உற்பத்தியும் மூன்றாம் நிலை உற்பத்தியும்
(4) இரண்டாம் நிலை உற்பத்தியும் மூன்றாம் நிலை உற்பத்தியும்
(5) முதனிலை உற்பத்தியும் இரண்டாம் நிலை உற்பத்தியும் (……)

**09.** நிலைபேறான பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு வணிகமொன்று பங்களிப்புச் செய்ய வேண்டியதாவது,

(1) உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்
(2) உள்வாரியான விலை உறுதித்தன்மையைப் பேணுதல்
(3) பொருட்களை இறக்குமதி செய்தல்
(4) வருமானப்பங்கீட்டு சமநிலையைப் பேணுதல்
(5) வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் (……)

**10.** பின்வருவனவற்றுள் மீள்உருவாக்கம் (Replace) என்பதற்குப் பொருத்தமான எடுத்துக்காட்டினைத் தெரிவுசெய்க.

(1) சாப்பாடு பொதிசெய்யும் பொலித்தீன்களுக்குப் பதிலாக சாப்பாட்டுப் பெட்டியினைப் பயன்படுத்துதல்.
(2) மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் வணிகமொன்று மீன்வளர்ப்பை மேற்கொள்ளல்.
(3) சுத்தமான நீரினை பிளாஸ்டிக் பொதிகளில் இடாதிருத்தல்.
(4) வைக்கோலிலிருந்து கடடிதாசி உற்பத்திசெய்தல்.
(5) அழிவடையாத பொலித்தீன்களைப் பயன்படுத்தாதிருத்தல். (……)

**11.** வணிகமொன்றுடன் தொடர்புபடும் பின்வரும் விடயங்களைக் கவனிக்க.

A – வணிகம்
B – நிதி நிறுவனங்கள்
C – ஊழியர்
D – வழங்குனர்
E – போட்டியாளர்
F – எதிர்கால முதலீட்டாளர்

வணிகமொன்று தனது ஒழுக்க விழுமிய முறைமையைக் கட்டியெழுப்பும்போது கவனம் செலுத்த வேண்டிய தரப்பினர்களைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.

(1) A, C, E, F (2) B, D, F (3) A, B, D, F
(4) C, D, E (5) A, C, E (……)

**12.** பின்வரும் விடயங்களுள் அரசின் இறைக்கொள்கையுடன் தொடர்புடைய நடவடிக்கை எது?

(1) அரசாங்கம் தனது அமைச்சுக்களுக்கான கட்டட வாடகைச் செலவைக் குறைப்பதற்காக பல தேவையற்ற கட்டடங்களின் வாடகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்தது.
(2) அரசுக்குத் தேவையான நிதியினைப் பெறுவதற்காக திறைசேரி உண்டியல் முறிகளை வழங்குவதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.
(3) வணிக வங்கிகள் வழங்கும் கடன்களுக்கான வட்டி வீதத்தை மேலும் குறைப்பதற்கான சாத்திப்பாடு காணப்படுகிறது.
(4) துணைநில் கடன் வசதி வீதத்தை மத்திய வங்கி குறைத்துள்ளது.
(5) அரச பிணைப்பத்திரங்களின் முதிர்வுக் காலத்துக்கு முன்னரான கழிவு வீதத்தை மத்திய வங்கி பொருளாதார நிலைமைகளுக்கேற்ப மாற்றுகிறது. (……)



kalvi.lk

**13.** சில வரி வகைகள் வருமாறு.

A – கம்பனி வரை B – சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி

C – வருமான வரி D – சுங்க வரி

E – நிறுத்தி வைத்தல் வரி F – உற்பத்தி வரி

மேற்படி வரி வகைகளை நேர் வரி மற்றும் நேரில் வரி என சரியான வகைப்படுத்தலைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.

| | **நேர் வரி** | **நேரில் வரி** |
|---|---|---|
| (1) | A, C, D | B, E, F |
| (2) | B, C, E | A, D, F |
| (3) | C, D, E | A, B, F |
| (4) | A, C, E | B, D, F |
| (5) | B, E, D | A, C, F |

(……)

**14.** நியாயமற்ற வியாபார நடைமுறைகளுக்கெதிராக நுகர்வோர்களைப் பாதுகாப்பதற்கும், நுகர்வோரின் உரிமைகளுக்கு உரிய மதிப்பளிப்பதை உறுதிப்படுத்துவதற்கும் உருவாக்கப்பட்ட அமைப்பு பின்வருவனவற்றுள் எது?

(1) மத்திய சுற்றாடல் அதிகார சபை
(2) இலங்கை தரக்கட்டளைகள் பணியகம்
(3) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை
(4) அளவை நிறுவை தரநியமச் சேவைத் திணைக்களம்
(5) தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (……)

**15.** நுகர்வோர் பாதுகாப்பின் மூலம் நுகர்வோருக்கும் வணிகர்களுக்கும் ஏற்படும் அனுகூலங்கள் வருமாறு.

A – செலுத்தப்படும் பணத்திற்கு ஏற்ற பெறுமானமுள்ள பொருள் கிடைப்பதற்கு நுகர்வோனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்.

B – சந்தை மோசடிகளிலிருந்து பாதுகாப்புப் பெறுதல்.

C – விற்பனைப் புரள்வு அதிகரிப்பதனால் இலாபம் உயர்வடையும்.

D – பாதகமான போட்டி, முறைகேடான செயற்பாடுகள் அற்ற நிலையின் காரணமாக சாதகமான வணிகச் சூழலொன்று ஏற்படல்.

E – தேவையான சந்தர்ப்பங்களின்போது நுகர்வோர் பாதுகாப்பிற்காகச் சட்டரீதியான பாதுகாப்புக் கிடைக்கப்பெறல்.

மேற்குறிப்பிட்டவற்றுள் நுகர்வோருக்கு மட்டும் கிடைக்கக்கூடிய அனுகூலங்களை மட்டும் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.

(1) A, B, D (2) A, B C (3) C, D, E
(4) A, B, E (5) A, D, E (……)

- ***16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களிலுள்ள இடைவெளியைப் பொருத்தமபான சொல் / சொற்களைப் பயன்படுத்தி நிரப்புக.***

**16.** (அ) தனக்கு தேவையானவற்றை தானே உற்பத்தி செய்தல் .................................................................. எனப்படுவதுடன், சிறப்புத்தேர்ச்சி காரணமாக .................................................... ஏற்படுகின்றது.

(ஆ) உள்நாட்டு வியாபாரத்தினை …………………………… ஆகவும் ……………………………… ஆகவும் வகைப்படுத்த முடியும்.

**17.** (அ) வணிகமொன்றின் ………………………. சூழலை ஆய்வுசெய்வதன் மூலம் அவ்வணிகத்தின் பலங்கள் மற்றும் பலவீனங்கள் என்பன இனங்காணப்படுவதுடன், ……………………………… சூழலை ஆய்வுசெய்வதன் மூலம் வாய்ப்புக்களும் அச்சுறுத்தல்களும் இனங்காணப்படும்.

(ஆ) வணிகங்களை பருமனின் அடிப்படையில் ……………………………… வணிகங்களாகவும் …………………………. வணிகங்களாகவும் வகைப்படுத்தப்படுகிறது.



kalvi.lk

**18.** (அ) வணிகச் செயற்பாடுகளை உள்ளீட்டு வெளியீட்டு செயன்முறையாக முன்வைக்கும்போது விளம்பரம் செய்தல், விநியோகித்தல், விலையினை நிர்ணயித்தல் என்பன …………………………………. தொழிற்பாட்டின் கீழ் உள்ளக்கப்படுவதோடு ஊழியர்களை இணைத்தல், பயற்சியளித்தல் மற்றும் பதவியுயர்வு வழங்கல் என்பன …………………………. தொழிற்பாட்டின் கீழ் உள்ளடக்கப்படும்.

(ஆ) வணிகமொன்றில் அதன் விருத்தி தொடர்பில் அறிந்துகொள்வதற்கு அவ்வணிகத்தின் மீது ………………………….. அக்கறைகொள்வதோடு கடன் பணத்தின் பாதுகாப்பினை அறிந்து கொள்வதற்கு ………………………….. அக்கறை கொள்கிறார்.

**19.** (அ) வணிகம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட ஒழுக்க விழுமியத்தினை எழுத்து வடிவில் காட்டும்போது அது ……………………………. எனப்படுவதோடு எதிர்கால பரம்பரையினரின் தேவைகளை நிறைவுசெய்வதற்கு இருக்கின்ற உரிமையினைப் புறக்கணிக்காது நிகழ்காலத் தேவைகளை அடைந்துகொள்ளல் …………………………….. ஆகும்.

(ஆ) நவீன சமூகத்தின் ……………………….. மற்றும் ……………………………. போன்ற செயற்பாடுகள் காரணமாக நாளாந்தம் அளவுக்கதிகமான கழிவுப் பொருட்கள் சேர்வதானது பூகோளரீதியான பிரச்சனையொன்றாக மாறியுள்ளது.

**20.** (அ) அரசாங்கத்தின் சம்பளமும் கூலியும் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் என்பன ………………….. செலவுகளாக உள்ள நிலையில் வீதி நிர்மாணம், பாலங்கள் நிர்மாணம் என்பன ……………… அரசின் செலவுகளாகும்.

(ஆ) இலங்கையில் பரவலாகக் காணப்படும் வணிக வகை …………………………. ஆகும். இவ்வணிகத்தின் உரிமையாளர் எண்ணிக்கை ……………………….. ஆகும்.

- *21* தொடக்கம் *25* வரையுள்ள வினாக்களுக்கு **மிகப் பொருத்தமான விடைகளை** தரப்பட்டுள்ள இடைவெளிகளில் எழுதுக.

**21.** சேவைகளுடன் ஒப்பிடும்போது பொருட்களின் பண்புகள் நான்கு தருக.

1. …………………………………………………………………………………………………
2. …………………………………………………………………………………………………
3. …………………………………………………………………………………………………
4. …………………………………………………………………………………………………

**22.** பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்கள் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றன?

1. …………………………………………………………………………………………………
2. …………………………………………………………………………………………………
3. …………………………………………………………………………………………………
4. …………………………………………………………………………………………………

**23.** வணிகப் பரம்பலின் முக்கியமான வளர்ச்சிக் கட்டங்கள் நான்கையும் தருக.

1. …………………………………………………………………………………………………
2. …………………………………………………………………………………………………
3. …………………………………………………………………………………………………
4. …………………………………………………………………………………………………



Education கல்வி
kalvi.lk

**24.** உற்பத்தியின் தன்மைக்கேற்ப பின்வரும் தொழில்களை வகைப்படுத்திக் காட்டுக.

*1.* மின்சாரம், வாயு, வெப்பம் மற்றும் குளிரூட்டல் ……………………………………

*2.* நிர்மாணக் கைத்தொழில் ……………………………………

*3.* சுரங்கமறுத்தலும் கனிய அகழ்வும் ……………………………………

*4.* நீர் சுத்திகரிப்பும் விநியோகமும் ……………………………………

**25.** வணிகமொன்றினால் சமூகப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டிய தரப்பினர் நால்வரைக் குறிப்பிடுக.

*1.* ……………………………………………………………………………………………...

*2.* ……………………………………………………………………………………………...

*3.* ……………………………………………………………………………………………...

*4.* ……………………………………………………………………………………………...

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 1st Term Examination - 2021

FWC

| தரம் :- 12 (2022) | வணிகக் கல்வி - II | |
|---|---|---|

- ***அறிவுத்தல்கள்:***

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

**01.** பின்வரும் சம்பவத்தினைக் கருத்தில் கொண்டு (i) – (iii) வரையான வினாக்களுக்கு விடையளிக்க. அழகுக் கலை தொடர்பான தொழில்சார் கற்கைநெறி ஒன்றினை நிறைவுசெய்த வேணி என்பவர் 'மங்கை' எனும் பெயரில் அழகுக் கலை நிலையம் ஒன்றினை ஆரம்பித்து நடாத்துகின்றார். இதற்காக அவர் வரவேற்பாளராக சுந்தர் என்பவரை நியமித்திருந்தார். இவ்வணிகத்தை நடாத்துதல் தொடர்பாக சுந்தரும் அனுபவத்தையும் திறனையும் கொண்டிருந்தார். மேலும், இவ்வணிகத்திற்காக கட்டடமொன்றைப் பெற்றிருந்ததுடன் அழகுக் கலை தொடர்பான சேவையில் பயன்படுத்துவதற்கான கருவிகள் தொகுதி ஒன்றையும் வேணி கொள்வனவு செய்தார். தனது வணிகத்தின் விருத்திக்காக வாடிக்கையாளர்களுக்கு தகவல் வழங்குவதற்காக அவர் விளம்பரப்படுத்தல் மற்றும் பதாகைகளைப் பயன்படுத்தினார்.

(i) (அ) வேணியின் வணிகமானது நபர் ஒருவரின் தேவையையா அல்லது விருப்பத்தையா பூர்த்திசெய்கிறது என்பதைக் குறிப்பிடுக.

(ஆ) அதன் பண்புகள் இரண்டினைத் தருக. *(02 புள்ளிகள்)*

(ii) வேணியின் வணிகத்தைப் பின்வரும் நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்தி எழுதுக.

(அ) உடமை (ஆ) நோக்கம்

(இ) அளவு (இ) உற்பத்தித் துறை *(02 புள்ளிகள்)*

(iii) வேணியின் வணிகத்தினால் பயன்படுத்தப்பட்ட உற்பத்திக் காரணிகளில் நான்கினை உதாரணங்களுடன் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) வணிகங்களில் காணப்படக்கூடிய பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(v) வணிகங்கள் பொதுவாகக் கொண்டிருக்கக்கூடிய நோக்கங்கள் நான்கினைத் தருக. *(02 புள்ளிகள்)*

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

**02.** (i) பண்டமாற்று முறை தொடக்கம் இன்று வரை பணப் பயன்பாட்டில் ஏற்பட்ட பரம்பலை படிமுறைரீதியாக உதாரணங்களுடன் தருக. *(02 புள்ளிகள்)*

(ii) வணிகங்களுக்கு அவசியமான துணைச் சேவைகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) இலத்திரனியல் வர்த்தகம் நிகழ்காலத்தில் பிரபல்யமடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணங்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iv) நிகழ்காலத்தில் தகவல் தொழிநுட்பத்தின் வளர்ச்சி காரணமாக வணிகத்துறையில் ஏற்பட்ட நவீன போக்குகளைத் தருக. *(02 புள்ளிகள்)*

(v) வியாபாரத்தின் வகைகளைக் காட்டக்கூடியவாறு பாய்ச்சல் கோட்டுப் படம் ஒன்றினை வரைக. *(02 புள்ளிகள்)*

***(மொத்தம் 10 புள்ளிகள்)***



kalvi.lk

**03.** (i) வணிகமொன்றின் அடிப்படை வணிகக் கருமங்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) பின்வரும் காரணங்களுக்காக வணிகம் அக்கறை கொண்டுள்ள தரப்பினரைப் பெயரிடுக.

(அ) முதலீட்டினை அதிகரித்துக்கொள்வதற்கு

(ஆ) வரிச் சலுகைகளைப் பெறுவதற்கு

(இ) உரிய பொருள் சேவை தொடர்பாக சந்தைப் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு

(ஈ) குறைந்த கிரயத்தில் நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கு *(02 புள்ளிகள்)*

(iii) பாடசாலையொன்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதும் பாடசாலைக்கு உள்ளும் வெளியேயும் காணப்படக்கூடிய காரணிகள் இவ்விரண்டு வீதம் எழுதுக. *(02 புள்ளிகள்)*

(iv) நிறுவனக் கலாசாரம் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு என்பவற்றைத் தனித்தனியாக வரையறுக்க. *(02 புள்ளிகள்)*

(v) போட்டியாளர் எனப்படுவோர் யார்? அவர்கள் வணிகமொன்றிற்கு எவ்வாறு வாய்ப்பாகவும் அச்சுறுத்தலாகவும் அமைவர் எனக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## பகுதி II

**04.** (i) பேரினச் சூழல் காரணிகள் எவ்வாறு வணிகங்களுக்கு வாய்ப்பினை உருவாக்குகின்றன என்பதை எடுத்துக்காட்டுக்கள் ஊடாக விளக்குக. *(02 புள்ளிகள்)*

(ii) வணிகங்களுக்கான சமூகப் பொறுப்புக்கள் (Business Social Responsibility) என்பதனையும் வணிகங்களின் ஒழுக்க விழுமியம் (Business Ethics) என்பதனையும் தனித்தனியாக வரையறுக்க. *(02 புள்ளிகள்)*

(iii) வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும், பொதுவாகச் சமூகத்திற்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் காரணிகள் பல வளர்ச்சியடைந்த வண்ணமுள்ளன. அக்காரணிகள் நான்கினைத் தருக. *(02 புள்ளிகள்)*

(iv) மீள்சுழற்சியினை மேற்கொள்ளக்கூடிய இருமுறைகளையும் உதாரணங்களுடன் தருக. *(02 புள்.)*

(v) வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் நான்கிளைத் தருக. *(02 புள்ளிகள்)*

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

**05.** (i) அரசின் பொருளாதார நோக்கங்கள் நான்கினைத் தருக. *(02 புள்ளிகள்)*

(ii) அரச வரி வருமானத்தின் பிரதான வரி வகைகளைத் தருக. *(02 புள்ளிகள்)*

(iii) அரச இறைக் கொள்கையினதும் அரச நிதிக் கொள்கையினதும் (பணக் கொள்கை / நாணயக் கொள்கை) பிரதான நோக்கங்களை தனித்தனியாகத் தருக. *(02 புள்ளிகள்)*

(iv) நுகர்வோர் பாதுகாப்பு என்பது யாது? கடந்த காலங்களை விட தற்காலத்தில் நுகர்வோர் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம் யாது? *(02 புள்ளிகள்)*

(v) பகுத்தறிவுள்ள நுகர்வோர் ஒருவர் எவ்வாறு சந்தையில் எவ்வாறு நடந்துகொள்வார் என விளக்குக. *(02 புள்ளிகள்)*

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

**06.** (i) இறைக் கொள்கை மூலம் வரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டாலும் அக்கொள்கை மூலம் வணிக நடவடிக்கைகள் மீது சாதகமான விளைவுகளும் ஏற்படுகின்றன. விளக்குக. *(02 புள்ளிகள்)*

(ii) அரச செலவுகளை வகைப்படுத்தி உதாரணங்கள் மூலம் விளக்குக. *(02 புள்ளிகள்)*

(iii) வணிகங்களுக்கு சாதகமாக அமையவேண்டுமாயின் பின்வருவன அதிகரிக்கப்பட வேண்டுமா அல்லது குறைக்கப்பட வேண்டுமா எனக் குறிப்பிடுக.

(அ) வங்கி வட்டி வீதம் (வங்கி வீதம்) (ஆ) காசொதுக்கு வீதம் *(02 புள்ளிகள்)*

(iv) நுகர்வோர் பொறுப்புக்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(v) இலங்கைத் தரக்கட்டளைகள் பணியகம் எவ்வாறு தர நியமங்களை நடைமுறைப்படுத்துகிறது எனக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

***(மொத்தம் 10 புள்ளிகள்)***



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page